
## ...னை செய்த ...பறிமுதல்

...செரிமானம் ஆகா ...படியே படிந்து ...உருவாக்கிவிடும் ...துவர்கள் கூறுகி... தோலை நீக்கி ...ப்பிடுவது. இல் ...றால் கொதிக்கும் ...ாட்டுக் கழுவி ... வெளியேற்றி ...ாப்பிடுவதுதான் ...ல்லது என்கிறார் ...ியல் நிபுணர்கள். ...யில் ஒசூர் பகு... மெழுகு பூசிய ...னை ஆய்வு ... வியாபாரிகளை ...ன் கண்டுபிடித்...

...ம் இது போன்ற ...னை மொத்தமாக ...ன் ஈஸ்ட் நிர்வா... ...நோட்டீஸ் அனுப்... இதுபோன்ற ...னை விற்போர் ...டிக்கை எடுத்து ...சில் வைக்கப்ப... ...எச்சரித்தனர்.



...ற மெழுகு பூசிய ...றையினர் பறிமுதல்



செயின்ட் பிரான்சிஸ் டி சேல்ஸ் கல்லூரி தின விழாவான 'அசெண்டம் 2025'ஐ தொடங்கி வைத்த பாஸ்டர் பென்னி ஜேக்கப், இஸ்ரோ முன்னாள் இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை உட்பட பலர்.

# செயின்ட் பிரான்சிஸ் டி சேல்ஸ் கல்லூரியில் 'அசெண்டம் 2025' தின கொண்டாட்டம்

**பெங்களூர், மார்ச் 23–**

செயின்ட் பிரான்சிஸ் டி சேல்ஸ் கல்லூரி தின விழா, 'அசெண்டம் 2025' என்ற பெயரில், கலாச்சார அதிர்வு மற்றும் கல்வி கொண்டாட்டமாக நடந்தது. 'ரிதம்ஸ் ஆப் இந்தியா' என்ற கருப்பொருளில் நடந்த இந்நிகழ்ச்சியில், ஸ்கூல் ஆப் காமர்ஸ், ஸ்கூல் ஆப் பிசினஸ் அண்டு மேனேஜ்மெண்ட், ஸ்கூல் ஆப் சயின்ஸ் மற்றும் ஸ்கூல் ஆப் ஹியூமானிட்டிஸ் மாணவர்கள், நாட்டின் பல்வேறு கலாச்சார பாரம்பரியத்தை வெளிப்படுத்தினர்.

பல்வேறு களங்களில் உள்ள மாணவர்களின் திறமைகள் மற்றும் சாதனைகளை அங்கீகரிக்கும் வகையில், பாரம்பரிய மற்றும் சமகால நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. 'அசெண்டம் 2025' வெற்றிபெற பிரமுகர்கள், ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பான பங்களிப்பு செய்தனர்.

சிறந்து விளங்குதல், செயல்திறன் மற்றும் மாற்றத்துக்கான அர்ப்பணிப்புடன், மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த, புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் கல்லூரி ஒரு தளத்தை தொடர்ந்து வழங்குகிறது. அதேநேரம், கடவுளின் அன்பு மற்றும் மனித குலத்துக்கான சேவையை நிலைநிறுத்துகிறது.

நிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினராக இஸ்ரோ முன்னாள் இயக்குனர் மயில்சாமி அண்ணாதுரை, பாஸ்டர்கள் பென்னி ஜேக்கப், பினாய் ஜான், பினு எடத்தும்பரம்பில் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



...த்தில் ஏரியின் ஆக்கிரமிப்புகள் பொக்லைன்

# ...க்கிரமிப்பு அகற்றம்

...மாணவர்களுக்கு ...ம் காலமாகியும் ... வர முடியாத ... நிலவியது. இத... ...பொதுமக்கள் சார் ...கலெக்டருக்கு இது ... கோரிக்கை

வீடுகள் என 18 பேரிடம் இருந்த ஆக்கிரமிப்புகள் மீட்கப்பட்டன.

மேலும் ஆக்கிரமிப்பில் கட்டப்பட்ட வீட்டின் உரிமையாளர்களுக்கு வேறு ...

# பிளாஸ்டிக் கவர்கள் 15 கிலோ பறிமுதல்

**பாப்பிரெட்டிப்பட்டி, மார்ச் 23 –**

கடத்தூர் பேரூராட்சியில் மீண்டும் மஞ்சப்பை இயக்கம் சார்பாக பிளாஸ்டிக் தடுப்பு சோதனை நடந்தது.

தர்மபுரி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் கணேசன், கடத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் விஜியாசங்கர் ஆகியோர் பணியாளர்களுடன் கடத்தூர் பேரூராசியில் பஸ் ஸ்டாண்டில் உள்ள கடைகள், மளிகை கடைகள், உணவகங்கள், பேக்கரி கடைகளில் அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கவர்கள், பொருட்கள் பயன்படுத்தப்படுவது குறித்து சோதனை செய்தனர்.

சோதனையில் 15கிலோ பிளாஸ்டிக் கவர்கள் பறிமுதல் செய்யப்பட்டது. கவர்கள் விற்ற கடைகாரர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரம் அபராதம் விதிக்கப்பட்டது.